அழுகிய உடல் மீட்பு

இந்த நிலையில் அவர் தங்கி இருந்த அறையில் இருந்து துர்நாற்றம் வீசியது.

இதுகுறித்து அப்பகுதி மக்கள் துடியலூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலின்பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று பார்த்தனர். அப்போது அங்கு தமிழ் செல்வநாதன் உடல் அழுகிய நிலையில் கிடந்தது.

துடியலூர் போலீசாரின் முதல்கட்ட விசாரணையில், தமிழ்செல்வநாதன் கடந்த 9–ந்தேதி அறையில் இருந்ததை சிலர் பார்த்து உள்ளனர்.

அதன்பிறகு அவர் திடீர் மாரடைப்பு காரணமாக இறந்து இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இதுதொடர்பாக போலீசார் மேலும் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

குன்னூர் பகுதியில்

மது விற்ற தொழிலாளி கைது

குன்னூர், நவ.15–

நீலகிரி மாவட்டம் குன்னூர் பகுதியில் அனுமதி இன்றி கூடுதல் விலைக்கு மது விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவலின்பேரில் குன்னூர் நகர போலீஸ் இன்ஸ்பெக்டர் கண்ணையன் தலைமையிலான போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

அப்போது பரசுராம் தெரு பகுதியை சேர்ந்த தொழிலாளி கலீம் (வயது 41) என்பவர் அனுமதியின்றி மதுபாட்டில் விற்பனை செய்தது தெரியவந்தது.

இதையடுத்து அவரிடம் இருந்து 20 மது பாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், கலீம் மீது வழக்குப்பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.



ஊழல் தடுப்பு முன்னெச்சரிக்கை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கோவை உக்கடம் புதிய பஸ் நிலையத்தில் கரகாட்டம் ஆடிய கிராமிய நடன கலைஞர்களை படத்தில் காணலாம்.

கைதான 'இன்ஸ்டா' பெண்...



1-ம் பக்க தொடர்ச்சி

இருப்பதாக தெரிவித்து இருந்தனர்.

காட்டி கொடுத்த கேமராக்கள்

இந்த கொள்ளை தொடர்பாக போலீசார் அதிரடி விசாரணை நடத்தி 500–க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமரா காட்சிகளை போட்டு பார்த் தனர்.

அப்போது கொள்ளை அடித்த நபர் முகமூடி அணிந்து, உடல் முழுக்க கருப்பு துணியை சுற்றிக் கொண்டு வெளியேறும் காட்சிகள் கடை மற்றும் அதன் அருகில் உள்ள கேமராக்களில் பதிவாகி இருந்தது.

நகைக்கடையை ஒட்டிய நேதாஜி மெயின் ரோடு பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கேமராக்கள் பதிவுகளை பார்த்த போது இளைஞர் ஒருவர் முகமூடி மற்றும் ஹெல்மெட் அணிந்தவாறு கையுறை ஆகியவற்றை அணிந்து பைக்கில் அதிவேகமாக பேக்குடன் சென்றது தெரிந்தது. அதனடிப்படையில் மதுரை பழங்காநத்தம் அருட்பெருஞ்ஜோதி தெரு பகுதியைச் சேர்ந்த நிஷாந்த் என்பவர் இந்த கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டது உறுதியானது.

கொள்ளையனின் கையில் வரையப்பட்ட டாட்டூ மற்றும் அவர் அணிந்திருந்த தொப்பி ஆகியவை கொள்ளை வழக்கில் போலீசாருக்கு முக்கிய துருப்பு சீட்டாக அமைந்து இருந்தது. அதை வைத்தே கொள்ளையனை அடையாளம் கண்டனர்.

யூடியூபர்

இதன்படி கொள்ளை சம்பவத்தை மிகவும் துணிச்சலாக அரங்கேற்றியது மதுரை வி.கே.பி. நகரை சேர்ந்த இன்ஸ்டாகிராம் பிரலபமான நிஷாந்த் கிருஷ்ணா என்பதை போலீசார் உறுதி செய்தனர்.

இதைத்தொடர்ந்து நேற்று அவரது வீட்டுக்கு சென்று போலீசார் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். அப்போது நிஷாந்த் வீட்டில் இல்லை.

அவரது செல் போனும் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டு இருந்தது. நிஷாந்தின் வீட்டில் நகைகள் பதுக்கி வைக்கப்பட்டு இருக்கலாம் என்ற எண்ணத்தில் தான் அதிரடி சோதனை நடத்தப்பட்டது. ஆனால் அங்கு அதற்கான எந்த தடயமும் சிக்கவில்லை.

காதலி

இருப்பினும் மனம் தளராத போலீசார் நிஷாந்தின் செல்போன் எண்ணை வைத்து துப்பு துலக்கினார்கள். இதில் நிஷாந்த் கொள்ளை நடந்த அன்று அவரது காதலியும், பிரபல யூடியூபருமான மீனாட்சியிடம் செல்போனில் தொடர்பு கொண்டு பேசி இருப்பது தெரியவந்தது. இருவரது இன்ஸ்டா கிராம் பக்கங்களையும் போலீசார் ஆய்வு செய்தனர். அப்போது இருவரும் ஒன்றாக இணைந்து தங்களது இன்ஸ்டாகிராம் பக்கங்களில் வீடியோக்களை வெளியிட்டிருப்பது தெரிய வந்தது. இதன் மூலம் இருவ ருக்கும் இடையேயான நெருக்கத்தை கண்டறிந்த போலீசார் மீனாட்சியின் வீட்டிற்கு சென்று அவரை தட்டி தூக்கினார்கள்.

ஒப்புக் கொண்டார்

இதன் பின்னர் பெண் போலீசாரின் துணையுடன் மீனாட்சியை போலீஸ் நிலையத்துக்கு அழைத்து சென்று தீவிர விசாரணை நடத்தினார்கள்.

கொள்ளை சம்பவத்தை அரங்கேற்றுவதற்காக காதலன் நிஷாந்து டன் சேர்ந்து திட்டம் தீட்டி யதை மீனாட்சி போலீசாரி டம் புட்டு புட்டு வைத்தார்.

இருவரும் இணைந்து தான் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டோம் என்பதை அவர் ஒப்புக் கொண்டார்.

கைது

கொள்ளை சம்பவத்தில் நேரடியாக ஈடுபடாத நிலையிலும், அதற்கு உறுதுணையாக இருந்த குற்றத்திற்காக மீனாட்சி அதிரடியாக கைது செய்யப்பட்டார். அத்துடன் நிஷாந்தின் தந்தை சுரேஷ் என்பவரும் கைதானார்.

மகனின் கொள்ளை குறித்து தெரிந்தும் அது பற்றி போலீசாருக்கு தகவல் தெரிவிக்காமல் மறைத்த குற்றத்திற்காக சுரேஷ் மீது நடவடிக்கை பாய்ந்துள்ளது.

பரபரப்பு வாக்குமூலம்

காதலுடன் சேர்ந்து நகைக்கடை கொள்ளையில் ஈடுபட்டது எப்படி? எதற்காக கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டனர் என்பது பற்றி மீனாட்சி போலீசில் பரபரப்பு வாக்குமூலம் அளித்துள்ளார். அதன் விவரம் வருமாறு:–

நான் தற்போது திருப்பாலை பகுதியில் புதிய வீடு கட்டி வருகி றேன். வீடு முழுமையாக கட்ட போதிய பணம் இல்லை. இது பற்றி நிஷாந்திடம் நான் தெரிவித்தேன். கடன் அதிகமாக இருப்பதால் என்ன செய்வது என்று தெரியவில்லை என கூறிய தும், அதைப்பற்றி நீ கவலைப்படாதே நான் பார்த்துக் கொள்கிறேன் என்று நிஷாந்த் கூறினான்.

எனக்காக

இதன்படி என்னிடம் உனக்காக கொள்ளை சம்பவத்தில் ஈடுபட போகிறேன். நீயும், நானும் செட்டிலாகி விடலாம் என கூறினான். நான் ஒன்றும் பிரச்சினை வராதே என தெரிவித்ததும், அதனை நான் பார்த்துக் கொள்கிறேன் என்றான்.

பின்னர் நகைக்கடையில் கொள்ளையடிக்கும் திட்டம் பற்றி நிஷாந்த் தான் என்னிடம் கூறி உனது ஸ்கூட்டர் வேண்டும் என்று கேட்டான். இதைத்தொடர்ந்து நான் எனது ஸ்கூட்டரை கொடுத்து அனுப்பினேன். அதில் சென்றுதான் நிஷாந்த் கொள்ளையில் ஈடுபட்டு உள்ளான்.

போனில் தெரிவித்தான்

கொள்ளை அடித்த பிறகு நிஷாந்த் முதலில் எனக்குத்தான் போன் செய்து பேசினான். நான் தான் நகைப் பையை வாங்கி வைத்தேன். பின்னர் மாடக்குளம் கண்மாய், வயல் வெளி பகுதியில் சாக்குப் பையில் கட்டி மண்ணுக்குள் அந்த நகை களை புதைத்து வைத்தான். அதன் பிறகு தான் அவன் மதுரையை விட்டு வெளி யேறினான்.

சம்பள பிரச்சினை

நான் முன்பு வேலை பார்த்த பிரபல யூடியூப் சேனலில் சம்பள பிரச்சினை காரணமாக வெளியேறினேன். அதன் பிறகு தனியாக இன்ஸ்டாகிராம் ரீல்ஸ் போட்டு வந்தேன். இருந்தபோதிலும் அதில் கிடைக்கும் வருவாய் என்னுடைய கடன் பிரச்சினை மற்றும் வீடு கட்டுவதற்கு போதுமானதாக இல்லை.

இதனை நான் பலமுறை நிஷாந்த்திடம் கூறியுள்ளேன். அதேபோல் இன்ஸ்டாவில் பிரபலமான போதும், அதில் கிடைக்கும் வருவாய் எங்கள் கஷ்டங்களை தீர்க்கவில்லை. எனவேதான் நகைக்கடையில் கொள்ளை அடித்தோம்.

இவ்வாறு அவர் வாக்குமூலம அளித்திருப்பதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

பிளாட்பாரத்தை தாண்டி நிற்கிறது:

கிணத்துக்கடவு ரெயில் நிலைய நடைமேடை நீட்டிக்கப்படுமா?

பயணிகள் எதிர்பார்ப்பு



கிணத்துக்கடவு, நவ.15–

கோவை மாவட்டம் கிணத்துக்கடவில் உள்ள ரெயில் நிலையம் வழியாக கோவை, பொள்ளாச்சி, மதுரை உள்ளிட்ட பகுதிகளுக்கு தினமும் 6 முறை ரெயில்கள் இயக்கப்படுகின்றன. மேலும் தூத்துக்குடி–மேட்டுப்பாளையம், திருநெல்வேலி–மேட்டுப்பாளையம் இடையே சிறப்பு ரெயில்களும் இயக்கப்பட்டு வருகின்றன.

சிறிய நடைமேடை

இந்த ரெயில் நிலையத்தில் மொத்தம் 2 நடைமேடைகள் உள்ளன. இந்த நடைமேடையில் 18 பெட்டிகளை கொண்ட ரெயில்கள் மட்டுமே முழுமையாக நிற்க முடியும். ஆனால் தற்போது 24 பெட்டிகளை உடைய ரெயில்கள் கிணத்துக்கடவு ரெயில் நிலை யத்துக்கு வந்து செல்கின்றன.அதிக பெட்டிகளை கொண்ட ரெயி ல்கள் வரும்போது, அதில் ஒருசில பெட்டி கள் நடைமேடையை தாண்டி நிற்கின்றன. இதன் காரணமாக பயணிகள் ஒதுக்கீடு செய்த பெட்டிகளில் ஏறவும், இறங்கவும் சிரமப்படுகின்றனர்.எனவே கிணத்துக்கடவு ரெயில் நிலைய நடைமேடையின் நீளத்தை அதிகரிக்க வேண்டும் என்று ரெயில் பயணிகள் நலச்சங்கம் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறது. இருப்பினும் சம்பந்தப்பட்ட ரெயில்வே நிர்வாகம் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதுதொடர்பாக ரெயில் பயணிகள் கூறுகையில், "கிணத்துக்கடவு ரெயில் நிலைய நடைமேடை நீளத்தை அதிகரிப்பது தொடர்பாக கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு ரெயில்வே அதிகாரிகள் கனஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது நடைமேடையின் நீளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. பின்னர் இதற்காக ரெயில்வே நிர்வாகம் சார்பில் நிதி ஒதுக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அங்கு இதுவரை பணிகள் தொடங்கவில்லை.

கிணத்துக்கடவு ரெயில் நிலையத்தில் நடைமேடையை தாண்டி ரெயில் பெட்டிகள் நிற்பதால் அங்கு வரும் முதியவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் வண்டியில் ஏற மிகவும் சிரமப்படுகின்றனர்.

எனவே பயணிகளின் நலனை கருத்தில் கொண்டு, கிணத்துக்கடவு ரெயில் நிலைய நடைமேடை நீளத்தை அதிகரிக்க ரெயில்வே நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்து உள்ளனர்.

ks smart TECHNOLOGIES

KS ஸ்மார்ட் டெக்னாலஜிஸ் லிமிடெட்

(முன்னர் Soma Papers & Industries Limited என அழைக்கப்பட்டது)
நிறுவன அடையாள எண் (CIN): L62099TN1991PLC196352
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் : 528, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை, தமிழ்நாடு - 600018
தொலைபேசி : 72003 94611 | இணையதளம்: https://ksstech.co | மின்னஞ்சல்: secretarial@kssmart.co

30 செப்டம்பர் 2026இல் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத தனி மற்றும் ஒருங்கிணைந்த நிதி முடிவுகள்

SEBI (LODR) ஒழுங்குமுறை 2015-இன் பிரிவு 33-இன் படி, 14.11.2026 அன்று நடைபெற்ற கூட்டத்தில், 30 செப்டம்பர் 2026 இல் முடிந்த காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத தனி மற்றும் ஒருங்கிணைந்த நிதி முடிவுகளை இயக்குநர்கள் குழு அங்கீகரித்தது.

நிதி முடிவுகள் மற்றும் வரையறுக்கப்பட்ட ஆய்வு அறிக்கை ஆகியவை நிறுவனத்தின் இணையதளத்தில் (https://ksstech.co/investors) பதிவேற்றப்பட்டுள்ளன. கீழே கொடுக்கப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் இதைப் பார்க்கலாம்.

இயக்குநர் குழுவின் உத்தரவின்படி
KS Smart Technologies Limited
(முன்னர் Soma Papers and Industries Limited என்ற பெயரில் அறியப்பட்டது)
ஒப்பம்/-
கேசவ் A S
மேலாண்மை இயக்குநர்
பதிவு எண்: 07863502
தேதி: 14.11.2026
இடம்: சென்னை

தமிழ்நாடு அரசு
திண்டுக்கல் மாவட்டம் - பாலசமுத்திரம் தேர்வுநிலை பேரூராட்சி
முதலமைச்சர் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு இயக்கம் (CMIUDM) -2026-2027 ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

ந.க.எண் : 868 / 2026 **நாள்: 13.11.2026**

பாலசமுத்திரம் தேர்வுநிலை பேரூராட்சியில் முதலமைச்சர் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு இயக்கம் (CMIUDM) 2026-2027 திட்டத்தின் கீழ் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை செய்வதற்கு தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் (Two cover System) முறையில் https://tntenders.gov.in இணையதளம் மூலமாக ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் பெற விரும்பும் ஒப்பந்ததாரர்கள் பொதுப் பணித்துறையில் அல்லது நெடுஞ்சாலை துறையில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும் அல்லது குறிப்பிட்ட பணிகளில் அனுபவம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அதற்கான சான்றிதழ்களை உரியதுறை அதிகாரிகளிடமிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

1. இப்பேரூராட்சியில் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் இப்பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது செயல் அலுவலரின் அங்கீகாரம் பெற்ற அலுவலராலோ வரவேற்கப்படுகின்றன.
2. பணிகளுக்குரிய ஒப்பந்தப்படிவங்களை 13.11.2026ம் தேதி முதல் 28.11.2026ம் தேதி வரை இணையதளம் மூலம் பெற விரும்புவோர் https://tntenders.gov.in என்ற தளத்திற்குள் சென்று விபரம் தெரிந்து கொள்ளலாம்.
3. டேவணித்தொகை https://tntenders.gov.in என்ற இணைதளம் வாயிலாக செலுத்தப்பட வேண்டும்.
4. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் 28.11.2026ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தொழிற்நுட்ப தகுதி (Technical Bid) திறக்கப்படும்.
5. இதர விபரங்களை அலுவலக வேலை நேரத்தில், நேரில் தெரிந்து கொள்ளலாம்.

வ எண்	பணியின் விபரம்	மதிப்பீடு இலட்சத்தில்	காப்புத் தொகை 1%	பணி முடிக்க காலம்
1	அரிசன காலனி ரோடு (வார்டு 10) தெற்கு காளியம்மன் கோவில் தெரு (வார்டு 11) பாலாறுமெயின் ரோடு மற்றும் குறுக்கு தெரு (வார்டு 13) குறும்பபட்டி பாலாறு ரோடு (வார்டு 1)குறும்பபட்டி பைப் ரோடு (வார்டு 2), 2வது வார்டு இட்டேரி ரோடு, வடக்கு அரிசன தெரு,வடக்கு அரிசன சாவடி தெரு,3வது வார்டு, கிறிஸ்துவர் தெரு 5வது வார்டு, காமாட்சியம்மன்கோவில் தெரு, வீரமாத்தியம்மன் கோவில் தெரு 9வது வார்டு,குலாளர் தெரு, இட்டேரி 2வது தெரு, வடக்கு அரிசன தெரு-1,2, வடக்கு அரிசன குறுக்குத்தெரு 1, 2, 3 (வார்டு 1), ரைஸ்மில்ரோடு (வார்டு 7) அரிசன காலனி ரோடு (வார்டு 11), 4வது வார்டு கிழக்கு அரிசன தெரு, 6வது வார்டு மேற்கு அரிசன சாவடி தெரு, 8வது வார்டு பள்ளிவாசல் தெரு மற்றும் அண்ணாநகர், 9வது வார்டு பஞ்சாயத்து யூனியன் பள்ளி ரோடு, 12வது வார்டு தேவர் மேற்கு தெரு, 15வது வார்டு அண்ணாநகர்,புளியமரத்துசெட் ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைத்தல்.	ரூ. 142.00	ரூ. 142000.00	180 நாட்கள்

தலைவர்
பாலசமுத்திரம் பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

செ.ம.தொ.இ / 3599/ ஒப்பந்தப்புள்ளி / 2026

செயல் அலுவலர்
பாலசமுத்திரம் பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

தமிழ்நாடு அரசு
மேட்டூர் நகராட்சி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண். 2373/2026/இ1 / நாள்.13.11.2026

1) மேட்டூர் நகராட்சி பொதுநிதியின் கீழ் **Operation and Maintenance of 5TPD Bio Methanation Plant with 5 years at Sarkar Thottam in Mettur Municipality.** பணி மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இணைய தளத்தின் வாயிலாக (https://tntenders.gov.in) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிது.
2) பணியின் மதிப்பீடு **ரூ.74.10 இலட்சம்.**
3) ஒப்பந்தப்புள்ளி சம்மந்தமான விபரங்களை (https://tntenders.gov.in) இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
4) ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை (https://tntenders.gov.in) இணையதள முகவரியில் **16.11.2026முதல் 04.12.2026 வரை** பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5) ஒப்பந்ததாரர்கள் முன் கலந்தாய்வு கூட்டம் 27.11.2026 **அன்று காலை 11.00** மாணியளவில் மேட்டூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும்.
6) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் 04.12.2026 மாலை 3.00 மணி வரை.
7) ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 04.12.2026 அன்று மாலை 3.30 மணி
8) பணியின் மதிப்பீட்டு தொகை, டேவணித்தொகை மற்றும் ஒப்பந்தாரருக்கான தகுதி உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் மற்றும் அலுவலக வேலை நாட்களில் நகராட்சி அலுவலகத்தில் நேரில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 3600 / ஒப்பந்தப்புள்ளி / 2026

ஆணையாளர்,
மேட்டூர் நகராட்சி.

MAGNA MasterCAST

மேக்னா எலக்ட்ரோ காஸ்டிங்ஸ் லிமிடெட்

CIN: L31103TZ1990PLC002836

பதிவு அலுவலகம் : எஸ்.எப்.எண். 34 மற்றும் 35, கோயம்புத்தூர் பொள்ளாச்சி மெயின் ரோடு, முள்ளிப்பாடி கிராமம், தாமரைக்குளம் அஞ்சல், கிணத்துக்கடவு தாலுக்கா, கோயம்புத்தூர் 642 109, தொலைபேசி: 4222240109
Email: info@magnacast.com Website: www.magnacast.com

தபால் வாக்குப்பதிவு / மின்னணு வாக்குப்பதிவு அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 110 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் நிறுவனங்களின் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் ('விதிமுறைகள்') விதி 22 (தற்போதைக்கு நடைமுறையில் உள்ள ஏதேனும் சட்டரீதியான திருத்தங்கள் அல்லது மறுஅமலாக்கங்கள் உட்பட) மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம் ("எம்சிஏ"), வெளியிட்ட ஏப்ரல் 8, 2020 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண்.14/2020, ஏப்ரல் 13, 2020 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண். 17/2020, செப்டம்பர் 22, 2025 தேதியிட்ட பொது சுற்றறிக்கை எண்.3/2025 உட்பட தொடர்புடைய சுற்றறிக்கைகள் (இனிமேல் கூட்டாக "எம்சிஏ சுற்றறிக்கைகள்" என்று குறிப்பிடப்படுகிறது) ஆகியவற்றுக்கு இணங்க, பின்வரும் தீர்மானங்கள் தொடர்பாக நவம்பர் 11, 2026 தேதியிட்ட தபால் வாக்குச் சீட்டு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி வணிகப் பரிவர்த்தனைக்கு மின்னணு முறையில் வாக்களிப்பதன் மூலம் உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற தங்களின் மின்னஞ்சல் முகவரிகளை நவம்பர் 6, 2026 நிலவரப்படி பதிவு செய்துள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் மின்னஞ்சல் மூலம் தபால் வாக்குப்பதிவு அறிவிப்பு அனுப்பும் பணியை நிறுவனம் நவம்பர் 14, 2026 அன்று நிறைவு செய்துள்ளது என்று உறுப்பினர்களுக்கு இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

1. திருமதி. நிவேதிதா லட்சுமி நாராயணசுவாமி (DIN: 11400888) அவர்களை நிறுவனத்தின் சுயாதீனமற்ற இயக்குநராக (Non–Independent Director) நியமிப்பது குறித்து பரிசீலித்தல் (சாதாரண தீர்மானம்)
2. திருமதி. நிவேதிதா லட்சுமி நாராயணசுவாமி (DIN: 11400888) அவர்களை நிறுவனத்தின் 'செயல் இயக்குநர் – நிதி' (Executive Director – Finance) என குறிப்பிடப்படும் முழுநேர இயக்குநராக நியமிப்பது குறித்து பரிசீலித்தல். (சிறப்புத் தீர்மானம்)
3. சுயாதீன இயக்குநராக (Independent Director) திரு. ஜி.டி. ராஜ்குமார் (DIN: 00197696) அவர்களை 5 ஆண்டுகள் கொண்ட இரண்டாவது பதவிக்காலத்திற்கு மறுநியமனம் செய்வது குறித்து பரிசீலித்தல். (சிறப்புத் தீர்மானம்)

நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவு 108 மற்றும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014ன் விதி 20 மற்றும் செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள், 2015ன் விதி 44 மற்றும் மேற்கூறிய MCA சுற்றறிக்கைகளுக்கு இணங்க, தபால் வாக்குச் சீட்டு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானத்தை நிறைவேற்ற நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு அவர்களின் இன்ஸ்டாவோட் மின்னணு வாக்களிப்பு தளமான https://instavote.linkintime.co.in மூலம் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதியை வழங்க, நிறுவனம் எம்யுஎப்.ஜி இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் ("MUFG") (முன்னர் லிங் இன்டைம் இந்தியா பிரைவெட் லிமிடெட்) சேவைகளைப் பயன்படுத்தியுள்ளது. **தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு நவம்பர் 15, 2026 ஞாயிற்றுக்கிழமை இந்திய நேரப்படி காலை 9:00 மணிக்கு ("IST") தொடங்கி டிசம்பர் 14, 2026 திங்கட்கிழமை மாலை 5:00 மணிக்கு இந்திய நேரப்படி முடிவடைகிறது.** அதன் பிறகு எம்யுஎப்.ஜி–ஆல் மின்னணு வாக்குப்பதிவு தொகுதி முடக்கப்படும், மேலும் குறிப்பிட்ட தேதிக்கு மேல் எந்த வாக்களிப்பும் சாத்தியமில்லை. எம்சிஏ சுற்றறிக்கைகளின் தேவைகளுக்கு இணங்க, தபால் வாக்குப் பதிவு அறிவிப்பு மற்றும் தபால் வாக்குப் படிவங்களின் காகித நகல் பங்குதாரர்களுக்கு அனுப்பப்படாது என்பதை உறுப்பினர்கள் நினைவில் கொள்ளவும். மேலும் பங்குதாரர்கள் தங்கள் ஒப்புதல் அல்லது மறுப்பை தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை மூலம் மட்டுமே தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கட்ஆஃப் தேதியின்படி, அதாவது வெள்ளிக்கிழமை, நவம்பர் 6, 2026 அன்று, நிறுவனத்தின் உறுப்பினர்களின் பதிவேட்டிலோ அல்லது வைப்புத்தொகையாளர்களால் பராமரிக்கப்படும் பயனாளிகளின் பதிவேட்டிலோ பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் மட்டுமே தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களிக்க உரிமையுடையவர்கள். கட்ஆஃப் தேதியின்படி நிறுவனத்தின் உறுப்பினர்களாக இல்லாத நபர்கள் இந்த அறிவிப்பை தகவல் நோக்கத்திற்காக மட்டுமே கருத வேண்டும்.

தபால் வாக்குச் சீட்டு வாக்களிப்பு செயல்முறையை நியாயமாகவும் வெளிப்படையாகவும் நடத்துவதற்காக, கோவையில் உள்ள M/S. எம்டிஎஸ் & அசோசியேட்ஸ் எல்எல்பி, நிறுவனச் செயலாளர்களின் நிர்வாக பங்குதாரர் திரு. M D செல்வராஜ் FCS, அவர்கள் ஆய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மின்னணு வாக்குப்பதிவு தளம் மூடப்பட்டதிலிருந்து 2 வேலை நாட்களுக்குள் தபால் வாக்கு மின்னணு வாக்குப்பதிவு முடிவுகள் அறிவிக்கப்படும். மேலும் இவை பிஎஸ்இ லிமிடெட்டில் (பிஎஸ்இ) தெரிவிக்கப்படும், அத்துடன் நிறுவனத்தின் இணையதளம் www.magnacast.com மற்றும் எம்யுஎப்ஜி இணையதளம் https://instavote.linkintime.co.in ஆகியவற்றிலும் பதிவேற்றப்படும்.

நீங்கள் உங்கள் மின்னஞ்சல் முகவரியை நிறுவனம் / RTA / வைப்புத்தொகை நிறுவனங்களில் பதிவு செய்யவில்லை என்றால், மின்னணு வாக்களிப்புக்கான உள்நுழைவு விவரங்களைப் பெறுவதற்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றலாம்:

(i) காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள், தயவுசெய்து ஃபோலியோ எண், பங்குதாரரின் பெயர், பங்குச் சான்றிதழின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன் மற்றும் பின்), நிரந்தரக் கணக்கு எண் (பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்), ஆதார் (ஆதார் அட்டையின் சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட நகல்) போன்ற தேவையான விவரங்களை நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவருக்கு coimbatore@in.mpms.mufg.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ அல்லது investorscell@magnacast.com என்ற மின்னஞ்சல் முகவரியிலோ வழங்கலாம்.

(ii) டிமேட் வடிவில் பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள், அந்தந்த டெபாசிட்டரி பங்கேற்பாளரால் அறிவுறுத்தப்பட்ட செயல்முறையின்படி, தங்கள் டிமேட் கணக்கில் விவரங்களைப் பதிவு செய்ய / புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மின்னணு வாக்களிப்பது தொடர்பான ஏதேனும் கேள்விகள் இருந்தால், உதவிப் பிரிவின் கீழ் https://instavote.linkintime.co.inல் கிடைக்கும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் ("FAQs") மற்றும் இன்ஸ்டாவோட் மின்னணு கையேட்டைப் பார்க்கவும் அல்லது enotices@in.mpms.mufg.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதவும் அல்லது 022 4918 6000 என்ற எண்ணில் அழைக்கவும் அல்லது M/S. எம்யுஎப்ஜி இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட், அலுவலகம்: 'சூர்யா', 35, மேப்ளவர் அவென்யூ, செந்தில் நகர் பின்னால், சவுரிபாளையம் சாலை, கோயம்புத்தூர் 641028 அல்லது அவர்களின் தொலைபேசி எண் +91 4222539835/36 அல்லது Ms. திவ்யா துரைசாமி, நிறுவனச் செயலாளர், எஸ்.எப்.எண்.34 மற்றும் 35, கோயம்புத்தூர் பொள்ளாச்சி மெயின் ரோடு, முள்ளிப்படி கிராமம், தாமரைகுளம் அஞ்சல், கிணத்துக்கடவு தாலுகா, கோயம்புத்தூர் 642 109; அல்லது தொலைபேசி எண்: 0422259316; அல்லது investorscell@magnacast.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும். தபால் வாக்குச்சீட்டு அறிவிப்பு நிறுவனத்தின் இணையதளம் www.magnacast.com, எம்யுஎப்ஜி இணையதளம் https://instavote.linkintime.co.in மற்றும் பிஎஸ்இ லிமிடெட்டின் இணையதளம் www.bseindia.com ஆகியவற்றில் கிடைக்கிறது.

சிறப்பு சாளரம் திறந்திருப்பது குறித்த அறிவிப்பு

ஜனவரி 30, 2026 தேதியிட்ட செபி சுற்றறிக்கை எண். HO/38/13/11(2)2026–MIRSD–POD/I/3750/2026–ன் படி, ஏப்ரல் 1, 2019–க்கு முன்பு விற்கப்பட்ட / வாங்கப்பட்ட காகித வடிவிலான பங்குச் சான்றிதழ்களை பரிமாற்றம் செய்வதற்கும் மற்றும் டிமேட் முறையில் மாற்றுவதற்கும் ஏதுவாக பிப்ரவரி 5, 2026 முதல் பிப்ரவரி 4, 2027 வரை ஒரு வருட காலத்திற்கு ("சிறப்பு சாளர காலம்") ஒரு சிறப்பு சாளரம் திறக்கப்பட்டுள்ளதாக உங்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. இந்த சிறப்பு சாளர வசதியானது (i) ஏப்ரல் 1, 2019–க்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்டு, ஆவணங்கள்/செயல்முறைகளில் உள்ள குறைபாடு அல்லது வேறு ஏதேனும் காரணங்களால் நிராகரிக்கப்பட்ட / திருப்பி அனுப்பப்பட்ட / பரிசீலிக்கப்படாத பரிமாற்றக் கோரிக்கைகளை மீண்டும் தாக்கல் செய்வதற்கும், மற்றும் (ii) ஏப்ரல் 1, 2019–க்கு முன்பு சமர்ப்பிக்கப்படாத புதிய பரிமாற்றக் கோரிக்கைகளை, அசல் பங்குச் சான்றிதழ் இருக்கும் பட்சத்தில் தாக்கல் செய்வதற்கும் பொருந்தும். இந்த சிறப்பு சாளர காலத்தில் பரிமாற்றம் செய்யப்படும் பங்குகள் கட்டாயமாக டிமேட் முறையில் மட்டுமே பெறுபவரின் கணக்கில் வரவு வைக்கப்படும், மேலும் அவை பரிமாற்றம் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு முடக்கத்தில் (lock–in) இருக்கும்.

தகுதியான முதலீட்டாளர்கள், மேற்குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரான (RTA) எம்யுஎப்ஜி இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் (முன்னர் "லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்"), அஞ்சல் முகவரி: 'சூர்யா', 35, மேப்ளவர் அவென்யூ, செந்தில் நகர் பின்னால், சௌரிபாளையம் சாலை, கோயம்புத்தூர் – 641 028, தமிழ்நாடு, இந்தியா. தொடர்பு எண்கள்: 0422 2314792, 2539835, 2539836 மின்னஞ்சல்: coimbatore@in.mpms.mufg.com என்ற முகவரிக்கு தேவையான அனைத்து ஆவணங்களுடன் பரிமாற்றக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்து இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குழு உத்தரவுப்படி
மேக்னா எலக்ட்ரோ காஸ்டிங்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
நா.கிருஷ்ணசாமராஜ்
நிர்வாக இயக்குனர்
DIN: 00048547

இடம்: கோயம்புத்தூர்
தேதி: 14 நவம்பர், 2026

கோவை சின்னியம்பாளையத்தில்

காதல் தோல்வியில் வாலிபர் தற்கொலை?

போலீசார் விசாரணை

கோவை, நவ.15–

தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டி அருகேஉள்ள மறுக்காளப்பட்டியை சேர்ந்தவர் சக்திவேல். இவர் இறந்துவிட்டார். இவரது மகன் ஹரிஹரன் (வயது 27). இவர் கோவை சின்னி யம்பாளையம் பகுதியில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். இதற்காக இருகூர் ரோட்டில் உள்ள அறையில் நண்பர்களுடன் தங்கி இருந்தார். இந்தநிலையில் ஹரிஹரன் அறையில் நண்பர்கள் இல்லாதபோது தூக்கு போட்டு தற்கொலைசெய்து கொண்டார். இதை பார்த்த அவரது நண்பர்கள் உடனடியாக 108 ஆம்புல ன்ஸ்க்கு தகவல் தெரிவித்த னர். அப்போது அவர் இறந்து விட்டது தெரிய வந்தது. இதுகுறித்து அவரது தாயார் அம்பிகா பீளமேடு போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். ஹரிஹரன் உடலை போலீசார் கைப்பற்றி விசாரணை நடத்தினர். ஹரிஹரன் நெல்லையில் உள்ள இளம்பெண் ஒருவரை காதலித்து வந்துள்ளார். அதன்பிறகு அவரை திருமணம் செய்ய முடிவுசெய்துள்ளார். இது குறித்து அந்தபெண்ணின் வீட்டாரி டம் சென்று ஹரிஹரன் குடும்ப த்தினர் பேசியுள்ளனர். இந்தநிலையில் திடீரென ஹரிஹரன் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என கூறப்படுகிறது. அவர் இறப்புக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

மாண்பமை சார்பு நீதிமன்றம் காங்கயம்.
A.S.No: 4/2026

திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், காங்கயம் டவுன், பழையகோட்டை ரோடு. மத்திய கூட்டுறவு வங்கி, லிமிடெட் பின்புறம், ராமராஜ் இல்லம், கதவு எண்.3-ல் வசிக்கும் லேட்.சம்பத் மனைவி சுமார் 68 வயதுள்ள **சிவகாமி** -(1) மேற்படி விலாசத்தில் வசிக்கும் லேட்.சம்பத் மகன் சுமார் 42 வயதுள்ள **பிரபு** (2)
- மேல்முறையீடுதாரர்கள்
/எதிராக/

பேரூர் -600 116, மதனந்தபுரம் அன்னை வேளாங்கண்ணி நகர், 4-வது வீதி கிரவுன்ட் புளோர், திருத்தணிகை வேல்பிளாக் -B, பிளாட்நெம்பர் 9. கதவு எண். 372 - N-ல் வசிக்கும் N.செந்தில்நாதன் மனைவி சுமார் 34 வயதுள்ள **உமாமகேஸ்வரி** (7)கோயமுத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் 9(அஞ்சல்) சி.டி.சி. டிப்போ எதிரில்,ரங்கராஜ் லே அவுட் -1 A. கதவு எண். 56-ல் வசிக்கும் B.மனோகர் பாதுகாப்பில் வசிக்கும் சுமார் 36 வயதுள்ள
என்.கார்த்திகேயன்-(8)
- 7.8 எதிர்மேல்முறையீடுதாரர்கள்

அறிவிப்பு

மேல்முறையீடுதாரர்கள் **சிவகாமி, பிரபு** மற்றும் **1-ம் எதிர்மேல்முறையீடுதாரர் ஜெயகாண்டீபன்** காங்கயம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் **நடேசன் முதலியாருக்கு** பாத்தியப்பட்ட சொத்தில் பாகம் கோரி **அ.வ.எண்:190/2016** -ல் வழக்கு தாக்கல் செய்து அதில் விசாரணைக்கு பின்னிட்டு 24.07.2023-ல் பிறப்புவித்த தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரையின் பேரில் காங்கயம் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து A.S.No: 4 / 2026-ல் நெம்பராகி எதிர்மேல்முறையீடுதாரர்களுக்கு மேல்முறையீட்டு சமன் அனுப்பியதில் 7,8 எதிர்மேல்முறையீடு தாரர்களுக்கு சமன் நீதிமன்ற மூலமும் தபால் மூலமும் சார்பு செய்ய இயலவில்லை. அதனால் 7.8 எதிர்மேல்முறையீடுதாரர்களுக்கு தமிழ் நாளிதழில் மேல்முறையீட்டில் சமன் பிரசுரம் செய்து சமன் சார்பு செய்ய காங்கயம் சார்பு நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளது. அதனால் 7.8 எதிர்மேல்முறையீடுதாரர்கள் ஆகிய நீங்கள் மேல்முறையீட்டில் ஆஜராகுவதற்கு **வருகிற 09-12-2026-ல்** வாய்தா போடப் பட்டுள்ளது. அன்று நீர் நேரிலோ வழக்கறிஞர் மூலமோ மேற்படி நீதிமன்றத்தில் **காலை 10.00 மணிக்கு** ஆஜராகி ஆட்சேபனை இருப்பின் தெரிவித்துக் கொள்ள வேண்டியது. இல்லாவிடில் உங்கள் மீது ஒரு தலைபட்சமாக டிகிரி பிறப்பிக்கப்படும் என்பதை கண்டிப்பாக அறியவும்.

/நீதிமன்ற உத்திரவுப்படி/
S.அங்குராஜ், B.Sc.,B.L.,
வழக்கறிஞர்.காங்கயம்- 638 701.

மேதகு மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றம் கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம்.
E.A.No. 13/2026
E.A.No. 1/2019
E.P.No. 42/2019
O.S.No. 15/2017

1. K.R.மாணிக்கம், (இறப்பு)
2. பத்மலோசினி
3. ராஜசேகரகாசிபதி
4. S.உமாலட்சுமி
5. C.சுபாஷினி
6. S.பத்ரிலட்சுமி

...மனுதாரர்கள் / தீர்ப்பு பெற்றவர்கள்

–எதிர்–

திருமதி.கமலாதேவி
க/பெ.(Late) நாகப்பன்,
C/o.திரு.தனராஜ்,
7/B2–7/B3–7B4–7B5, யமுனா இல்லம், கஸ்தூரி வீதி கணபதி, கோயம்புத்தூர்.
...3ம் எதிர்மனுதாரர் / தீர்ப்பு கடனாளி

அறிவிப்பு

மேற்படி 3வது எதிர்மனுதாரர் திருமதி கமலாதேவி ஆகிய நீவீர் அறியக்கடவது யாதெனில், இப்பவும் மேற்படி மனுதாரர்கள் / தீர்ப்பு பெற்றவர்கள் தாக்கல் செய்துள்ள தாவா சொத்து சம்பந்தமான நிறைவேற்று மனுவில் உமது தரப்பினை நீதிமன்றத்திற்கு தெரிவிக்கும் பொருட்டு மேற்படி வழக்கானது வருகின்ற 30.11.2026–ம் தேதிக்கு வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு நீவீர் நேரடியாகவோ, அல்லது உமது வழக்குரைஞர் மூலமாகவோ மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி உமது தரப்பில் ஆட்சேபணை ஏதும் இருப்பின் அவற்றை தெரிவிக்கலாம். தவறினால் நிறைவேற்று மனு உங்களுக்கு எதிராக ஒருதலைப் பட்சமாக அனுமதிக்கப்படும் என்பதை அறியவும்.

–நீதிமன்ற உத்திரவுப்படி–
G. சுந்தரம், M.A., M.L., M.Phil.,
S.பிரியா, B.A., B.L.,
S.ரங்கசாமி, M.Com., B.L.,
E.பிரியங்கா, BSc., LLB.,
E.நிஷாந்த், B.A., LLB.,
வழக்குரைஞர்கள்,
சத்தியமங்கலம்

சிறப்பு சார்பு நீதிமன்றம்
திண்டுக்கல்
MACOP No: 825/2026

1. பரிதாபேகம்
2. ஜன்னத் பர்சு
3. ருக்கி
4. சகானா

–மனுதாரர்கள்
–Vs–

1. தினேஷ்குமார், S/o. சுப்ரமணி
108, அண்ணாநகர்
ஒத்தக்கால் மண்டபம்
கோயம்புத்தூர்–641032
–1–ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மை நிர் வழக்கில் கடந்த 19.3.2025–ந் தேதி கர்நாடகா மாநிலம் பெங்களூர் அருகே நடந்த TN–99/ JD–3047 TATA intra வேன் விபத்தில் இறந்து போன காதர்மைதின் இறப்பிற்கு இழப்பீடு கோரி மனுதாரர்கள் தரப்பில் மனுத் தாக்கல் செய்து மை மனுவில் வருகிற 9.12.2026–ந்தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. எனவே வருகிற 9.12.2026–ந் தேதி காலை 10.30 மணிக்கு தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

K. RAMASAMY. B.A.,B.L..
Advocate/Notary, Dindigul.